DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.66/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | விஸ்வநாதன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | ராஜு | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.06.2026.
1, 2, 3 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் மேட்டுத்திருக்காம்புலியூரில் குடியிருந்து பேக்கரி கேசியராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 28.07.2017ம் தேதி அ.சா.1 வீட்டை வண்டியோடு வந்து இடித்துவிட்டார்கள். சம்பவம் நடக்கும் போது நான் கடையில் இருந்தேன். தகவல் வந்து அ.சா.1 வீட்டிற்கு சென்று பார்த்த போது அவரது வீடு தரைமட்டமாக இருந்தது. 2 நாட்கள் கழித்து போலிசார் கடைவீதிக்கு வந்தார்கள். படம் வரையவேண்டும் என்று சொல்லி போலிசார் என்னை சாட்சி கையொப்பம் போட வேண்டும் என்று கேட்டார்கள். வரைபடம் வரைந்து என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சி கையொப்பம்

செய்தேன். என்னுடன் மூர்த்தி என்பவர்கையொப்பம்செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி, அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் கடந்த 30.07.2017 ம் தேதி 12.30 மணிக்கு சம்பவ இடத்தில் எதிரிகள் வீட்டுசென்ற TN 66 J 3220 என்ற தோஸ்த் மினி லாரியையும் கடப்பாறை, இரும்புக்கம்பி, குச்சி ஆகியவற்றை போலிசார் கைப்பற்றிச்சென்றார்கள் என்றால் போலிசார்கைப்பற்றினார்கள் அதை நான் பார்த்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடப்பாறை, குச்சி, இரும்புக்கம்பி ஆகியவற்றைத்தான் போலிசார் சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றினார்களா என்றால் ஆமாம்.

**<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.29 10:55:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.